# இலக்கு

இதழ் 69

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

வாராந்த மின்னிதழ்

மார்ச் 15, 2020

GLOBAL TAMIL MEDIA CENTER, USA



Ilakku2009@gmail.com www.ilakku.org www.facebook.com/ilakku.ilakku.10 https://twitter.com/Ilakku1





## ஈழத்தமிழரின் அவலம்தான் பிலொ- ஈலா (Biloela) ஈழத் தமிழ்க் குடும்பம்

## கோவிட்-19 ஒரு கொடிய நோயல்ல!

மருத்துவ கலாநிதி **விக்னேஸ்வரன்**



## தென்னிலங்கை ஜனநாயக சக்திகளுடனும் சேர்ந்து வேலை செய்ய வேண்டிய நிலை உள்ளது

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் **திரு மாவை சேனாதிராஜா**



## தேர்தலுக்கான தமிழ் அரசியல் கூட்டுகளும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளும்


பரமபுத்திரன்



## எமது பாரம்பரிய நிலத்தை நாம் ஏன் இழக்க வேண்டும்?

### தமது நிலங்களுக்காக போராடும் தமிழ் பெண்கள்

நன்றி: அல்ஜசீரா




தமிழ் தேசிய இலக்கை நோக்கிய தாயகம், தமிழகம் மற்றும் அனைத்துலக செய்திகள், ஆய்வுகள் என்பவற்றை தினமும் எமது இலக்கு இணைய தளத்தில் பார்வையிட தவறாதீர்கள் !

www.ilakku.org

## முற்றாக முடங்கும் நிலையில் சிறீலங்காவின் சுற்றுலாத்துறை



சிறீலங்காவின் 4.4 பில்லியன் டொலர்கள் வருமானம் கொண்ட சுற்றுலாப் பயணத்துறை முற்றாக முடங்கும் நிலை தோன்றியுள்ளதால், சிறீலங்கா மிகப்பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டுள்ளது.

கடந்த வருடம் உயிர்த்த ஞாயிறு அன்று இடம் பெற்ற தாக்குதலால் ஏறத்தாள 880 மில்லியன் டொலர்களை இழந்த சிறீலங்காவின் பொருளாதாரம் தற்போது அதனைவிட பல மடங்கு இழப்பை சந்திக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

சிறிலங்காவின் மொத்த வருமானத்தில் 5 விகிதம் சுற்றுலாத் துறையின் வருமானமாகும். தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக விமானப் பயணங்கள் நிறுத்தப்பட்டுள்ளதுடன், பெருமளவில் விடுதிகளின் பதிவுகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது விடுதிகளின் முன் பதிவு 186 விகித வீழ்ச்சியைக் கண்டுள்ளது. அதாவது முன்பதிவுகளைவிட இரத்துச் செய்யும் எண்ணிக்கையே அதிகம். எனவே தான் விகிதம் 100 ஐ விட அதிகமாக உள்ளது.

11 நாடுகளில் இருந்து பயணிகள் வருவதை தடை செய்துள்ளது. மேலும் அதிக பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பதுடன், விடுதிகளின் முன் பதிவுகள் மேலும் 70 விகிதம் வீழ்ச்சியடையலாம் என சிறீலங்கா ஆடம்பர விடுதி சபை தெரிவித்துள்ளது.

2018ஆம் ஆண்டு 4.38 பில்லியன் டொலர்களாக இருந்த சுற்றுலாத்துறை வருமானம் 2019 ஆம் ஆண்டு 3.59 பில்லியனாக வீழ்ச்சி கண்டிருந்தது. தற்போது மேலும் ஒரு பில்லியன் டொலர்கள் வீழ்ச்சி கண்டால் அதிக சேதம் ஏற்படாலம் என தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, சிறீலங்கா ரூபாயின் பெறுமதி ஒரு அமெரிக்க டொலருக்கு 185 ரூபாய்களாக வீழ்ச்சி கண்டுள்ளது. வரலாற்றில் இது முதல் தடவை என தெரிவிக்கப்படுகின்றது.

மத்தள விமான நிலைய அபிவிருத்தி
## இந்தியா வெளியேற்றம்



சிறீலங்காவின் மத்தள ராஜபக்சா அனைத்துலக விமான நிலைய முகாமைத்துவ உடன்பாட்டில் இருந்து இந்தியா வெளியேறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவின் முகாமைத்துவத்தை தாம் விரும்பவில்லைஎனசிறீலங்காவிமானப்போக்குவரத்து அமைச்சர் பிரசன்ன ரணதுங்கா தெரிவித்துள்ளார். 51 விகித பங்குகளை சிறீலங்காவுக்கும் 49 விகித பக்குகளை இந்தியாவுக்கும் வழங்கும் உடன்பாட்டில் இந்தியாவுக்கு விருப்பமில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மத்தள விமான நிலையத்தின் உடன்பாட்டை இந்தியாவுக்கு வழங்குவதற்கான அனுமதியை கடந்த வருடம் சிறீலங்கா அமைச்சரவை வழங்கியிருந்தது.

## தமிழர் பண்பாட்டை உலகிற்கு உணர வைத்த வைரஸ்



மேற்குலகில் மக்கள் சந்திக்கும் போது கை குலுக்கிக் கொள்வது வழக்கமானது, இந்த வழக்கம் உலகின் பல நாடுகளுக்கும் பரவியிருக்கும் இன்றைய நிலையில், கொரோனா வைரஸ் தமிழர்களின் பண்பாடான கைகளை கூப்பி வணக்கம் தெரிவிக்கும் முறையை உலகிற்கு அறிமுகப் படுத்தியுள்ளது.

கை குலுக்குவதன் மூலம் வைரஸ் கிருமிகள் மக்களுக்கு வேகமாக பரவி வருவதாக விஞ்ஞானிகளும் மருத்துவர்களும் எச்சரித்ததை தொடர்ந்து, உலகின் பல முக்கிய தலைவர்கள் கடந்த வாரம் மேற்கொண்ட சந்திப்புக்களின் போது வணக்கம் தெரிவிக்கும் முறையை பயன்படுத்தியிருந்தனர்.

இதனை பல ஊடகங்கள் முதன்மைப் படுத்தி காண்பித்திருந்தன. அமெரிக்க அதிபர், பிரித்தானியாவின் இளவரசர் சார்ள்ஸ் ஆகியோர் உட்பட பலர் இவ்வாறு வணக்கம் செலுத்தியதை நீங்கள் படங்களில் காணலாம்.

அண்மையில் அயர்லாந்து பிரதமருடனான சந்திப்பின் போது அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அவர்கள் வணக்கம் செலுத்தியது தொடர்பில் விளக்கமளித்துள்ளார்.

“கை குலுக்காமல் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தேன். அண்மையில் தான் இந்தியாவில் இருந்து நான் திரும்பினேன். அங்கே அனைவரும் கைகளை கூப்பி வணக்கம் தெரிவித்தனர். அந்த முறை மிகவும் எளிமையாக உள்ளதால். இந்தியாவில் இருந்து வந்ததில் இருந்து கை குலுக்காமல் வணக்கம் தெரிவித்து வருகிறேன்” என அவர் தெரிவித்துள்ளார்.

## பொதுத் தேர்தலை தள்ளிவையுங்கள்
ரணில்

சிறீலங்காவின் இயல்பு நிலை முற்றாக முடங்கியுள்ள நிலையில் தேர்தலை நடத்துவது சாத்தியமில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் சிறீலங்காவின் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

பெதுத் தேர்தலை சிறீலங்கா அரச தலைவர் கோத்தபாயா ராஜபக்சா ஒத்தி வைக்க வேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

வடக்கில் தனியார் கல்வி நிலையங்கள்
## காலவரையின்றி மூடல்

சிறீலங்காவின் வடபகுதியில் கொரோனா வைரசின் தாக்கம் அதிகரிக்கலாம் என்ற அச்சம் காரணமாக வடபகுதியில் உள்ள தனியார் கல்வி நிலையங்களை மறு அறிவித்தல் வரும் வரை மூடுமாறு வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஏப்பிரல் மாதம் 20 ஆம் நாள் வரையிலும் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களை மூடுவதற்கு சிறீலங்கா கல்வி அமைச்சு தீர்மனித்ததைத் தொடர்ந்து ஆளுநர் இந்த அறிவிப்பை கடந்த வெள்ளிக்கிழமை (13) வெளியிட்டுள்ளார்.

பிரதேச சபைகள், நகர சபைகள், மாநகர சபைகள் ஆகியன இந்த உத்தரவு நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் என அவர் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார். வடபகுதியில் உணவுக்கோ அல்லது எரிபொருளுக்கோ பற்றாக்குறை இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சார்க் மாநாட்டை காணொளியில்
## நடத்துவதற்கு திட்டம்

கொரோனா அச்சம் காரணமாக சார்க் மாநாட்டை காணொளி வழியாக நடத்துவதற்கு சார்க் நாடுகளின் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

இன்று (15) மாலை இடம் பெறும் இந்த மாநாட்டில் கொரோனா வைரஸ் பிரச்சனை தொடர்பாக ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

காணொளி வழியாக கூட்டத்தை நடத்துவதற்கான ஆலோசனையை இந்திய பிரதமர் நரேந்திர மோடியே வழங்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான முறுகல் நிலையை தொடர்ந்து சார்க் நாட்டு தலைவர்கள் 2014ஆம் ஆண்டு காத்மண்டுவில் கூடிய பின்னர் கூட்டத்தை மேற்கொள்ளவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# கொரோனா வைரஸ்

## உலகம் முழுவதும் 145,000 பேர் பாதிப்பு



*உலகம் முழுவதும் பரவி வரும் கொரோனா வைரசின் தாக்கத்திற்கு நேற்று(14) வரையில் 5,400 இற்கு மேற்பட்டோர் பலி யாகியுள்ளதுடன், 145,857 பேர் பாதிக்கப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படு கின்றது.*

*பாதிக்கப்பட்டவர்களில் 72,532 பேர் குணமடைந்துள்ளனர். ஐரோப்பாவே தற்போது இந்த வைரசின் மையப் புள்ளியாக உள்ளதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.*

*இதனிடையே சீனாவுக்கு அடுத்ததாக இத்தாலியே அதிகம் பாதிக்கப்பட்ட நாடாக உள்ளது. நேற்று (14) வரை அங்கு 1,441 பேர் பலியாகியுள்ளதுடன், 21,157 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.*

# கொரோனா அச்சம்

## சிறீலங்காவில் பொது விடுமுறை



*கொரோனா வைரஸ் தொற்று காரண மாக எதிர் வரும் திங்கட்கிழமை (16) அரச விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

*பொது நிர்வாக, உள் நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜானக பண்டார தென்னகோன் இதனை தெரிவித்துள்ளார்.*

*இதனிடையே, சிறீலங்காவில் கொரோனா வைரஸ் நோயாளர்களின் எண்ணிக்கை 10 ஆக அதிகரித்தது்ள்ளது.*

*தெகிவளை மிருகக்காட்சி சாலை, பின்னவெல யானைகள் காப்பகம், சபாரி பூங்கா, தாவரவியல் பூங்கா உட்பட பெரும்பாலான சுற்றுலாத்துறை இடங்களை சிறீலங்கா அரசு மூடியுள்ளதுடன், மக்கள் பெருமளவில் கூடுவதையும் தடை செய்துள்ளது.*

# பொதுத் தேர்தலில் தமிழ் கட்சிகளை

## ஒன்றிணைக்கும் நடவடிக்கை மட்டக்களப்பில் ஆரம்பம்



*இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வடக்கு கிழக்கு மறை மாவட்ட நீதிக்கும் சமா தானத்திற்குமான ஆணைக் குழுவின் ஏற்பாட்டில் பொதுத் தேர்தலில் தமிழ் அரசியற் கட்சி களின் ஒற்றுமையை வலியுறுத்தல் தொடர்பிலான கலந்துரையாடலொன்று நேற்றையதினம் (14) மட்டக்களப்பு செல்வநாயகம் மண்டபத்தில் அருட்பணி சுஜித்தர் சிவநாயகம் அவர்களின் தலைமையில் இடம் பெற்றது.*

*இக்கலந்துரையாடலில் மதகுருமார்கள், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கம், தமிழீழ விடுதலைக் கழகத்தின் உபதலைவர் கே.விமலநாதன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் த.சுரேஸ், கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் தலைவர் சட்டத்தரணி டி.சிவநாதன், மட்டக்களப்பு சிவில் சமூக ஒன்றியங்களின் தலைவர் எஸ்.சிவயோகநாதன், சிவில் சமூக அமையத்தின் பிரதிநிதி டி.நிதர்சன், மட்டக்களப்பு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் அமைய செயலாளர் செல்வி அனோஜா உட்பட சமூக ஆர்வலர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.*

*இதன் போது தற்போதைய நிலையில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் அரசியற் கட்சிகளின் ஒற்றுமையின் முக்கியத்துவம், ஒற்றுமைப்பட முடியாமைக்கான காரணங்கள், ஒவ்வொரு கட்சிகளினதும் கொள்கை விளக்கங்கள் போன்றன தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.*

இலக்கு

## தேர்தல் அறிக்கைகள் ஈழத்தமிழர் இறைமைக்கு முன்னுரிமை கொடுத்தாலே ஈழத்தமிழர் உரிமைகள் மீளும்

சிறீலங்காவின் மனித உரிமைகள் குறித்த அமெரிக்க மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் 2020 அறிக்கை, 'பலியாக்கப்பட்டோரை அவமானப்படுத்தலாக' (affront to victims) ஐக்கிய நாடுகள் சபையில் மனிதாயத்திற்கு எதிரான குற்றங்களையும், எண்ணிக்கையற்ற போர்க் குற்றங்களையும் செய்த படைப் பிரிவுக்குத் தலைமைப் பொறுப்பேற்றவரென ஆவணப்படுத்தப்பட்ட சவேந்திர சில்வாவை சிறீலங்காவின் இராணுவத் தலைமைத் தளபதியாக நியமித்த சிறீலங்காவின் செயலைக் குறித்துள்ளது. அவ்வாறே தமிழர்கள் குறிப்பாக வடக்கில், கூர்மையான கண்காணிப்பின் கீழ் தொல்லைப்படுத்தப்படுதலை எதிர் கொள்கின்றனர். (Continued to face harassment and intrusive surveillance) எனவும், வடக்கு கிழக்கில் சிவில் சமூகத்தினரும், செயற்பாட்டாளர்களும், கண்காணிப்புகளுக்கும் தொல்லைப்படுத்தப்படுதல்களுக்கும் உள்ளாக்கப்படுவது அதிகரித்துக் கொண்டே செல்கிறது எனவும், இவ் அறிக்கை உலகுக்கு விளக்கியுள்ளது.

மேலும், ஐக்கிய நாடுகள் சபையின் அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கும் இணைவதற்குமான சுதந்திரம் குறித்த சிறப்பு அறிக்கைப் பதிவாளரான கிளமொன்ட் நயாலெட்சூசி வூலோ (Clement Nyaletsoosi Voule) அவர்களின் அறிக்கை, வடக்கு கிழக்கில் தகாத முறையில் உரிமைகளுக்குத் தடைகள் படைகளால் ஏற்படுத்தப்படுவதையும், வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களுக்குப் படையினர் மிரட்டல்கள் மேற்கொண்டு வருவதையும், தமிழர்களின் நினைவு நிகழ்வுகள் படையினரால் குழப்பப்படுவதையும், மார்ச் மாதத்தில் அம்பாறையில் வலிந்து காணாமால் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் நடாத்திய நினைவு நிகழ்வில் சிறீலங்காப் படையினர் புகுந்து பதாகைகளையும் அலங்காரப் பொருட்களையும் சேதப்படுத்தி அல்லது அழித்து, பங்குபற்றியவர்களையும் கைது செய்யப் போவதாக மிரட்டியதையும், கூடவே வடக்கு கிழக்கில் மக்களின் நில உரிமைகள், வலிந்து காணாமலாக்கப்பட்டோர்க்குப் பொறுப்புக் கேட்டல், நீதிகோரல், அவர்களின் குடும்பங்களுக்கு போரின் பின்னரான மறுவாழ்வு அளித்தல், போன்ற மக்கள் நலச்சேவை செய்யும் அமைப்புக்களைப் பதிவதற்கு மறுத்து அவர்களைக் கடுங்கண்காணிப்புக்கு உள்ளாக்கி தொல்லை அளித்து வருவதையும், சுட்டிக் காட்டியுள்ளதை, அமெரிக்க அறிக்கையும் எடுத்துரைத்துள்ளது.

கூடவே அனைத்துலக மட்டத்தில் மனித உரிமைகளைப் பேணுவதில் முக்கிய வகிர்பாகத்தை வகிக்கும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் மனித உரிமை ஆணையாளர், சிறீலங்கா அரசாங்கம் தனது மனித உரிமைகளுக்கான பங்களிப்புக்களை நிறைவேற்றவில்லை என எச்சரித்ததுடன் "யுத்தக் குற்றச் செயல்கள், மனிதாயத்திற்கு எதிரான குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் என்பனவற்றில் ஈடுபட்டவர்களுக்குத் தண்டனைகள் அளிக்காத சிறீலங்கா அரசாங்கத்தின் செயல்கள் சமூக முரண்பாடுகளையும் இனத்துவ மோதல்களையும் தூண்டி உறுதியற்ற நிலையினை உருவாக்கும் எனவும் எச்சரித்துள்ளதையும் இவ் அறிக்கை பதிவு செய்துள்ளது.

இவ்வாறெல்லாம் உலக நாடுகளும் அமைப்புக்களும் தமிழர்கள் மேல் அக்கறை செலுத்தினாலும், அவற்றைச் சிறீலங்கா தனது இறைமை மேலான தலையீடெனவே அன்றும் இன்றும் அறிவித்து வருகிறது. இதன் வழி 'சிறிலங்காவின் இறைமை' என்னும் சொல்லாட்சிக்குள், இலங்கைத் தீவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல், சிங்கள தேச இனத்தை விட மூத்த தேசிய இனமாக உள்ள ஈழத்தமிழர்களின் இறைமையினைச் சிங்கள பௌத்த பேரினவாதம் தான் பறிப்பதை மறைத்து, தனக்கு மட்டும்தான் இலங்கையில் இறைமையுண்டெனச் சலம் சாதிக்கிறது. இந்நிலை மாற, இலங்கைத் தமிழர்களின் இறைமையை வெளிப்படுத்தும் தேர்தல் களமாகத் தமிழ்க் கட்சிகள் தமது கொள்கை விளக்க அறிக்கைகள் மூலம் தேர்தல் களத்தை மாற்ற வேண்டிய நேரமிது. அவர்களைக் கொண்டிதனைச் செய்விப்பது தமிழர் அனைவரதும் இலக்காக அமையட்டும்.

***- ஆசிரியர்***

# தென்னிலங்கை ஜனநாயக சக்திகளுடனும் சேர்ந்து வேலை செய்ய வேண்டிய நிலை உள்ளது

**தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு மாவை சேனாதிராஜா**




**முழு இலங்கையும் இராணுவ மயமாகும் நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டிலும் ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டிய அத்தியாவசிய தேவை இருக்கின்றது. அப்படி ஜனநாயகம் இந்த நாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டு எதிர் கால அரசாங்கம் அரசியல் தீர்வுகளை உருவாக்கு மானால், அந்த அடிப்படையில் தான் எங்கள் இனத்தின் விடுதலையும், நிலத்தின் விடுதலையையும் தமிழ் மக்கள் தங்களை தாங்களே ஆள வேண்டும் என்ற அந்த தீர்மானத்தையும் நாங்கள் ஜனநாயக ரீதியாக முன்னெடுக்கும் சந்தர்ப்பங்கள் கிட்டும் என்பதால், தென்னிலங்கை ஜனநாயக சக்திகளுடனும் நாங்கள் சேர்ந்து வேலை செய்ய வேண்டிய ஒரு தீர்மானத்தையும் எங்கள் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்க இருக்கின்றோம் என தமிழரசுக் கட்சியின் தலைவரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு மாவை சேனாதிராஜா அவர்கள் இலக்கு ஊடகத்திற்கு வழங்கிய சிறப்பு நேர்காணலில் தெரிவித்துள்ளார்.**

**அவர் வழங்கிய முழுமையான நேர்காணல் வருமாறு:**

**கேள்வி:**

**எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எத்தகைய நிலப்பாட்டைக் கொண்டுள்ளது?**

**பதில்:**

தமிழரசுக் கட்சி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) ஆகிய மூன்று கட்சிகளும் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்துள்ளோம். ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் எத்தனை வேட்பாளர்களை நியமிப்பது என்று தீர்மானித்துள்ளோம். கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் சில வேட்பாளர்கள் நியமிக்கப்படாதிருக்கின்றது. அதை ஒரு சில நாட்களில் நியமித்து விடுவோம்.

இந்த காலகட்டத்தில் இப்போதுள்ள அரசாங்கமும், ஜனாதிபதியும் முற்றுமுழுதாக ஒரு பௌத்த சிங்கள ஒற்றையாட்சி, பெரும்பான்மை ஆட்சியாக நடத்த வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு அரசியலமைப்பை உருவாக்க வேண்டும் என்று அறிவித்துள்ள நிலையில், இந்த நாட்டில் முக்கியமான பிரச்சினையாக இனப்பிரச்சினை இருப்பது என்று ஒரு வார்த்தைகூட கூறாது, பொருளாதார பிரச்சினை தான் இருக்கின்றது என்று கூறுவதை தமிழ் பேசும் மக்கள் நிராகரிக்க வேண்டும்.

அதேபோல தென்னிலங்கையில் சஜித் பிரேமதாசா அவர்களுக்கும் 55 இலட்சம் வாக்குகள் கிடைத்தன. ஆனால் அவரின் தேர்தல் அறிக்கையில் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டங்களுக்கான அடிப்படை முன்மொழிவுகளை கொடுத்திருக்கின்றார். நாங்கள் முக்கியமாக இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும், தமிழ் பேசும் மக்களின் வடக்கு கிழக்கு மாவட்டம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்ற இலக்குடன் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களிக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் தேர்தலில் நிற்கின்றோம். அப்பொழுது தான் தேர்தல் முடிந்ததற்கு பிறகு அரசின் ஏதாவது மாற்றங்கள் இனப்பிரச்சினையை தீர்ப்பதில் ஏதாவது அறிவிப்பு ஏற்படுமா என்பதை பற்றி ஜனநாயக ரீதியாக தமிழ் மக்களின் சார்பில் கிடைக்கின்ற பலத்தை பிரயோகிக்க தீர்மானிக்க வேண்டியிருக்கும்.



அதேநேரம் முழு இலங்கையிலும் இராணுவ மயமாக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டிலும் ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டிய அத்தியாவசிய தேவை இருக்கின்றது. அப்படி ஜனநாயகம் இந்த நாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டு எதிர்கால அரசாங்கம் அரசியல் தீர்வுகளை உருவாக்குமானால், அந்த அடிப்படையில் தான் எங்கள் இனத்தின் விடுதலையையும், நிலத்தின் விடுதலையையும் தமிழ் மக்கள் தங்களை தாங்களே ஆளுகிறார்கள். ஆள வேண்டும் என்ற அந்த தீர்மானத்தையும் நாங்கள் ஜனநாயக ரீதியாக முன்னெடுக்கும் சந்தர்ப்பங்கள் கிட்டும் என்பதால், தென்னிலங்கை ஜனநாயக சக்திகளுடனும் நாங்கள் சேர்ந்து வேலை செய்ய வேண்டிய ஒரு தீர்மானத்தையும் எங்கள் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்க இருக்கின்றோம்.

இந்த அடிப்படையில் தான் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை மையில் பாராளுமன்ற பிரதிநிதிகளை மிகப்பெரும்பாலான அளவில் அவர்கள் தெரிவு செய்வார்கள் என்ற நம்பிக்கையில் அவர்களுக்கு அழைப்புவிட இருக்கின்றோம்.

**கேள்வி:**

**வடக்கிலும் கிழக்கிலும் தற்போது அதிக அரசியல் கட்சிகள் சுயமாக போட்டியிடும் நிலை தோன்றியுள்ளது. இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளதைக் காட்டுகின்றதா?**

**பதில்:**

தேசிய கட்சிகளாக இருக்கின்ற கட்சிகளுக்கு தமிழ் பேசும் மக்களிடம் ஆதரவு கிடைக்கும் என நினைக்கவில்லை. சொற்ப வாக்குகள் அவர்களுக்கு கிடைக்கலாம். தமிழ்ப் பிரதேசங்களில் இப்போது தான் புதிதாக ஆரம்பிக்கும் கட்சிகளும் இருக்கின்றன. அவர்களிடத்தில் இலக்கு அற்ற ஒரு கருத்து தெரிவிக்கப்படுகின்றன. எப்படி எங்கள் இனத்தின் பிரச்சினையை அணுகலாம், தீர்க்கலாம். சர்வதேச ரீதியாக இலங்கை தொடர்பான மனித உரிமை பிரச்சினைக்கான தீர்விலிருந்து விலகுவதாக இந்த அரசாங்கமும், இந்த அரசும் தீர்மானித்துள்ள நிலையில் பல கட்சிகள் இவ்வாறு போட்டியிட வந்திருந்தாலும், அவர்கள் எங்கள் வாக்குகளை குறைப்பது பிரிப்பது என்று பேசினாலும், இறுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குத் தான் வாக்களிக்கின்ற நிலைமை உருவாகிவரும். இந்த நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது.

**கேள்வி:**

**ஐ.நா மனித உரிமைகள் அமைப்பின் தீர்மானத்தில் இருந்து சிறீலங்கா அரசு வெளியேறியது தொடர்பில் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன?**

**பதில்:**

இன்றைய நிலைமையில் நாட்டில் தேர்தலுக்கு பின்னரும் குறிப்பாக மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களை மையமாகக் கொண்டு எடுக்கப்படும் அரசின் தீர்மானத்திற்கு எதிராக சர்வதேசம் செயற்பட வேண்டும் என்ற ஒரு அவசியம் இருக்கின்றது.

**கேள்வி:**

**போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதாற்காக ஐ.நா மனித உரிமை அமைப்புடன் இணைந்து பணியாற்றும் திட்டங்கள் ஏதும் உள்ளதா?**

பதில்:

தற்போது எங்கள் இனத்தின் பிரச்சினையை நாங்கள் தீர்மானிக்க வேண்டியிருக்கின்றது. அந்த அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2011, 2012ஆம் ஆண்டுகளிலிருந்து மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்கள் தொடர்பில் பணியாற்றியிருந்தது. ஆகவே தமிழ் மக்கள் அதனை ஏற்றுக் கொண்டு உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் எங்கள் இனத்தை மையமாகக் கொண்ட தீர்மானங்கள் தொடர்பில் நாங்கள் செயலாற்றுவதற்கு மக்கள் எங்களுக்கு வாக்களிப்பார்கள்.

**கேள்வி**

**தமிழர் தாயகப் பிரதேசமான வடக்கு கிழக்கு பிரதேசங்களில் கொரோனா பாதிப்பிற்குள்ளான சந்தேக நபர்களை முகாம் அமைத்து வைத்திருக்கின்றார்கள். இது தொடர்பாக உங்கள் கருத்து என்ன?**

**பதில்:**

கொரோனா வைரஸ் பாதிப்பிற்குள்ளானவர்களை கொழும்பில் வைத்திய வசதிகள்உள்ள இடங்களில் வைத்திருப்பது தான் நல்லது. தமிழர் பிரதேசங்களில் அந்த வைரஸ் தொற்று பரவியதாகவோ தொற்று இருப்பதான அடையாளங்களோ செய்திகளோ இல்லை. அவ்வாறனவர்களை தமிழர் பிரதேசங்களில் கொண்டு வரும் போது அவர்களுக்கும் தொற்று ஏற்பட்டு விடும் என மக்கள் அச்சமடைந்திருக்கின்றார்கள். ஆதலால் அவர்களை தென்னிலங்கையில் பாதுகாப்பான பிரதேச ங்களில் பல வசதிகளைக்

**தொடர்ச்சி 11ம் பக்கம்**



### வாழ்வதற்கு ஏதுவான வசதிகள் இன்மையால்

## கிராமத்தில் இருந்து வெளியேறும்

# கப்பாச்சி கிராம மக்கள்

**வா**ழ்வதற்கு ஏதுவான வசதிகள் எதுவும் இன்றி குடியேற்றப்பட்டுள்ளதாக தெரிவித்து கப்பாச்சி கிராம மக்கள் கிராமத்தில் இருந்து வெளியேறி செல்லும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.




செட்டிகுளம் பிரதேச செயலகர் பிரிவில் முகத்தான்குளத்தின் குளக்கட்டினை பிரதான வீதியாக கொண்டு அமைந்துள்ள கப்பாச்சி கிராமம் கவனிப்பாரற்ற வாழ்விடமாக மாறி வருகின்றது.

95 குடும்பங்களைக் கொண்ட இக் கிராமத்தில் மக்கள் 1977ஆம் ஆண்டு குடியேறியிருந்த போதிலும், அக்காலப் பகுதியில் மக்கள் செறிவுத் தன்மை காரணமாக வெவ்வேறு பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். 1990 ஆம் ஆண்டு எற்பட்ட நாட்டின் ஸ்திர மற்ற தன்மையினால், இக் கிராம மக்கள் வெளியேறி மடு பிரதேசத்திற்கு சென்றிருந்தனர்.

எனினும் மடு பிரதேசத்தில் இருந்த குறிப்பிட்ட குடும்பத்தினர் மீண்டும் அங்கிருந்து இந்தியாவிற்கு அகிக ளாக சென்று விட மிகுதியாக இருந்த சுமார் 40 குடும்பங்கள் வரையில் மீளவும் தமது கிராமத்தில் குடியேற விரும்பியிருந்தனர்.

இந் நிலையிலேயே முகத்தான்குளத்தை அண்டிய பகுதியில் தாம் குடியேறினால் நீர் வசதியுடன் வாழலாம் என்ற எண்ணத்தில் இருந்த சமயம், 1994ஆம் ஆண்டு காலப் பகுதியில் அப் பிரதேசத்தின் செயலாளர் கப்பாச்சி கிராமத்தின் மேட்டுப் பிரதேசத்தில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினை அமைத்து அதனை சூழ மக்களை குடியேற்றுமாறு உத்தர விட்டிருந்தாக அக் கிராம மக்கள் தெரிவி க்கின்றனர்.

**கோ- ரூபகாந்**



அரச அதிகாரிகளின் உத்தரவிற்கமைய அப்பிரதேசத்தில் தாம் குடியேறிய போதிலும், குடிநீர் வசதிகளோ ஏனைய போக்குவரத்து வசதிகளோ இன்றி தாம் வாழ்ந்ததாகவும், 6 குழாய் கிணறுகள் அமைக்கப்பட்ட போதிலும் அவற்றில் 1 கிணற்று நீரை மாத்திரமே குடிப் பதற்கு பயன்படுத்த முடியும் எனவும், ஏனைய வை குடிநீருக்கு உகந்தது இன்மையால் நோய் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் நீர் பரி சோதகர்கள் தெரிவித்துள்ளதால் கிராம மக்கள் குடிநீருக்கு பெரும் அல்லல்படும் நிலை இன்றும் காணப்பட்டு வருகின்றது.

இந் நிலையில் திறந்த கிணறுகளை அமைப்பதென்பது எட்டாக்கனியாகியுள்ள இக் கிராமத்தில், சுமார் 150 அடி ஆழமான ஒரு கிணறு வெட்டப்பட்டுள்ள போதிலும் அதிலும் கோடை காலத்தில் நீர் இன்றியே காணப்படும் என்கின்றனர் ஊர்வாசிகள். இது மாத்திரமின்றி குளக்கட்டினை மாத்திரம் பிரதான வீதி யாக கொண்டமைந்த இக் கிராமத்தில் போக்கு வரத்து வசதிகள் ஏதுமின்மையால், பொது மக்கள் சுமார் 3 கிலோ மீற்றர்கள் நடந்தும் துவிச்சக்கர வண்டிகளிலுமே பயணத்தை மேற் கொள்கின்றனர்.

இருந்த போதிலும் பாடசாலை மாண வர்கள் பலர் துவிச்சக்கர வண்டிகள் இன்மை யால் சுமார் 35 மாணவர்கள் நடைபவனி யாகவே வெயிலிலும் மழையிலும் தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இவ்வாறான நிலையில் இக் கிராம மக்களின் உயிரை காவு கொள்ளும் வகையில் யானை களின் நடமாட்டமும் தற்போது கிராமத்தி ற்குள் காணப்படுதுடன், மின் கம்பங்களை உடைப்பதும் வீடுகளின் சுவர்களை தள்ளுவது மாக யானைகள் அட்டசகாசம் புரிவதனால் இக் கிராமத்தில் மக்கள் வாழ முடியாதுள்ளதாகவும் கிராம மக்கள் தெரிவி க்கின்றர்.

இந் நிலையில் இக் கிராமத்தில் மக்களின் மீள்குடியேற்றத்திற்கு முக்கிய காரணியாக இருந்த பல நோக்கு கூட்டறவுச் சங்கம் பல ஆண்டுகளாக மூடப்பட்டு விட்டமையினால் பல நோக்கு கூட்டுறவுச் சங்க கட்டிடம் பாழடைந்து கவனிப்பாரற்று காணப்படுவதுடன் கிராம மக்களும் தமது அன் றாட பொருட்களை கொள்வனவு செய்வதற்கு கப்பாச்சி கிராமத்தில் இருந்து சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள முதலியார்குளம் கிராமத்திற்கே செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இக் கிராமத்திற்கு கிராம சேவகரோ சமுர்த்தி உத்தியோகத்தரோ வராமையினால் தமது நிலைமைகளை அரச அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறுவதற்கு கூட எவரும் அற்ற மக்களாக தாம் உள்ளதாக ஆதங்கத்தை வெளியிடும் இக் கிராம மக்கள், தமது கிராமத்தில் இருந்து மெல்ல மெல்ல மக்கள் வெளியேறி வருவதனால் பல வீடு கள் தற்போது பற்றைகள் மூடி காட்சி யளிப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே தமது கிராமத்தை அழி வில் இருந்து காக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர் கப்பாச்சி கிராம மக்கள்.

• • •


# எமது பாரம்பரிய நிலத்தை நாம் ஏன் இழக்க வேண்டும்?

## தமது நிலங்களுக்காக போராடும் தமிழ் பெண்கள்



**பா**டசாலை ஆசிரியையான சந்திரலீலா ஜெசிந்தனின் குடும்பம் போரின் இறுதி நாட்களில் வீட்டில் இருந்து சிறீலங்கா படையிரால் வெளியேற்றப்பட்டிருந்தனர். அதன் பின்னர் கடந்த பத்து வருடமாக அவர்களின் நிலத்தில் சிறீலங்கா படையினர் தங்கியுள்ளனர்.

கடந்த 3 வருடங்களாக திருமதி ஜெசிந்தனுடன் இணைந்து பல டசின் பெண்கள் கேப்பாபிலவில் உள்ள தமது பாரம்பரிய நிலங்களை மீட்பதற்கான போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். சிறீலங்காவின் வரலா ற்றில் இது மிக நீண்ட போராட் டமாகும்.




இந்த போராட்டத்தில் பங்கெடுக்க ஆண்களுக்கு விருப்பம் இருந்தாலும் படையினரின் அச்சுறுத்தல்கள் ஏற்படலாம் என்ற அச்சம் அவர்களுக்கு உள்ளது. ஆனால் நாங்கள் பெண்கள் இது எமது நிலம், அதுவே எங்களின் பாதுகாப்பு, இது எங்களின் உரிமை எனவே நாம் அதற்காக போராடாது விட்டால் யார் போராடுவார்கள் என 43 வயதான திருமதி ஜெசிந்தன் தெரிவித்துள்ளார்.

நாம் போரில் எல்லாவற்றையும் இழந்து விட்டோம், ஏன் நாம் பாரம்பரியமாக வாழ்ந்த நிலத்தையும் இழக்க வேண்டும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். சிறீலங்காவில் 1983ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டு வரையில் இடம் பெற்ற போரில் பல பத்தாயிரம் மக்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து இடம் பெயர்ந்துள்ளனர்,

பல மக்கள் தமது நிலங்களை மீளப் பெற்ற போதும், கேப்பாபிலவில் உள்ள 350 ஏக்கர் நிலம் தற்போதும் படையினர் வசம் உள்ளதாக நில உரிமைக்கான மக்கள் கூட்டணி தெரிவித்துள்ளது.

2018ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்னர் காணிகள் அனைத்தும் மீண்டும் ஒப்படைக்கப்படும் என சிறீலங்காவின் முன்னாள் அரச தலைவர் மைத்திரிபால சிறீசேனா தெரிவித்திருந்தார். ஆனால் அவர் அதனை நிறைவேற்றவில்லை.

85 விகிதமான நிலங்களை கையளித்துள்ளதாகவும், மீதமுள்ள நிலங்கள் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தவை எனவும் சிறீலங்கா இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு போரின் போது தனது நிலத்தில் இருந்து வெளியேறிய செல்லம்மா சிங்கரட்ணம்(87) நிலத்தை மீட்பதற்காக உண்ணாநிலை போராட்டத்தை மேற்கொண்டுள்ளார். மூன்று வருடங்கள் இடம் பெயர்ந்தோர் முகாமில் இருந்த பின்னர் அவரின் குடும்பம் வீட்டுக்கு திரும்பிய போது அவரினதும், அவரின் மகளினதும் வீடுகள் படையினரால் கையகப்படுத்தப்பட்டிருந்தன.

போராட்டத்தின் பின்னர் இராணுவம் வீட்டை கையளிக்க முன்வந்தது, ஆனால் அவரின் வீடு பலத்த சேதமடைந்துள்ளது. வீட்டை திருத்துவதற்கு எம்மிடம் பணமில்லை என தனது வீட்டுக்கு வெளியில் அமர்திருந்தவாறு அவர் தெரிவித்தார்.

சிறீலங்காவில் காணப்படும் ஊழல்கள், இயங்காத நீதித்துறை, வெளிப்படையற்ற தன்மை, பொறுப்புக் கூறலற்ற தன்மை என்பன நில உரிமையாளர்களின் நிலையை மோசமாக்கி வருவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

போரின் போது சிறுபான்மை தமிழ் மக்கள் வடக்கிலும், கிழக்கிலும் இருந்து பல தடவைகள் துரத்தப்பட்டுள்ளனர். தமிழ் மக்களின் நிலங்களைக் கைப்பற்றிய படையினர் அங்கு முகாம்களையும், உயர் பாதுகாப்பு வலையங்களையும் அமைத்து அதனை மீண்டும் வழங்க மறுக்கின்றனர். காணிகள் வழங்கப்பட்டாலும் அதனை துப்பரவு செய்வதற்கான உதவிகள் வழங்கப்படுவதில்லை என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது 2018ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சில நிலங்களை படையினர் விவசாயத்திற்கும், சுற்றுலாத் துறைக்கும் பயன்படுத்தி வருகின்றனர். போரின் போது பல பத்தாயிரம் தமிழ் மக்கள் தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்திருந்தனர். அவர்களை மீளக்குடியமர்த்தும் பணிகளை ஐ.நாவின் அகதிகளுக்கான அமைப்பு 2011ஆம் ஆண்டு மேற்கொண்டிருந்தது. அதன் பயனாக 8,529 மக்கள் மீண்டும் திரும்பியதாக அதன் வதிவிடப் பிரதிநிதி மெனிக் அமரசிங்கா தெரிவித்துள்ளார்.

மேலும் 100,000 தமிழ் மக்கள் தமிழகத்தில் தங்கியுள்ளனர். ஆனால் திரும்பியவர்களில் மூன்றில் இரண்டு பகுதியினருக்கு காணிகள் இல்லை. 30,000 தமிழ் மக்கள் தற்போதும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நிலையில் தான் வாழ்கின்றனர். அவர்கள் தமது வீடுகளையும் நிலங்களையும் இழந்தவர்கள்.

நிலங்களை கையகப்படுத்துவது அமைதியை உருவாக்காது, அது வன்முறையானது. மக்களின் உரிமைகளை வழங்க வேண்டும், அவர்களின் சுதந்திர நடமாட்டத்தை அனுமதிக்க வேண்டும் என கொழும்பைத் தளமாகக் கொண்ட மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் தெரிவித்துள்ளது.

நிலமே சிறீலங்காவில் உள்ள மக்களின் சொத்தும், அடையாளமும் என மையத்தின் ஆய்வாளர் பவானி பொன்சேகா தெரிவித்துள்ளார். நிலங்களை மீள ஒப்படைப்பதே நீண்ட காலத்தில் அமைதியை ஏற்படுத்தும் என அவர் மேலும் தெரிவித்துளார்.

நாடு திரும்பும் மக்களுக்கு சிறிய அளவிலான நிலங்களை வழங்குவதாக சிறீலங்கா அரசு தெரிவித்திருந்தது. ஆனால் அதற்கும் நீண்ட காலம் காத்திருக்க வேண்யுள்ளது.

1992ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த 100 தமிழ் மக்கள் கடந்த ஆண்டு இரணைதீவில் மீண்டும் குடியேறியுள்ளனர். இதுவரை காலமும் அவர்கள் அங்கு மீன்பிடிப்பதற்கும் தேங்காய்கள் பறிப்பதற்குமே சென்று வந்தனர். 2009ஆம் ஆண்டு போர் நிறைவடைந்த பின்னர் அவர்கள் அங்கு சென்ற போதும், கேந்திர முக்கியத்துவமான பகுதி எனக் கூறி சிறீலங்கா கடற்படையினர் அவர்களை அனுமதிக்கவில்லை.

பெருமளவான மனுக்கள் சமர்ப்பித்து, பெண்கள் குறிப் பாக கணவரை இழந்த பெண்கள் தமது வாழ்வாதாரமே இந்த நிலம் தான் என தெரிவித்து 2018ஆம் ஆண்டு மேற்கொண்ட ஒரு வருட போராட்டத்தின் பின்னரே தமது நிலங்களை மீண்டும் பெற்றுள்ளனர். அங்குள்ள கத்தோலிக்க தேவாலயம் அதற்கான உதவிகளை வழங்கியிருந்தது. எனினும் கடற்படையினர் சிறிய அளவிலான நிலப் பகுதியை தற்போதும் தம்வசம் வைத்துள்ளனர்.

ஆனாலும் அதனையும் மீட்பதற்காக தாம் போராடி வருவதாக போராட்டத்தை வழிநடத்தும் மரியா ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

ஆனால் கேப்பாபிலவில் போராட்டம் மேற்கொண்டு வரும் திருமதி ஜெசிந்தனை சிறீலங்கா படையினர் பல தடவைகள் விசாரணைக்கு அழைத்துள்ளனர். அவரின் கணவர் இறந்த மறுநாளும் அவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

தனக்கு கொலை மிரட்டல்களும் விடுக்கப்பட்டதாகவும், தனது வீட்டில் கண்காணிப்பு கருவிகள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கணவரை இழந்த நான் இராணுவத்தை எதிர்த்து போராடுவது கடினமானது, ஆனால் எமக்கு இந்த நிலம் மட்டுமே உள்ளது. எனவே அதனை பெறும் வரை தொடர்ந்து போராடுவோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

**நன்றி: அல்ஜசீரா**

• • •

# தேர்தலுக்கான தமிழ் அரசியல் கூட்டுகளும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளும்

பகுதி 1



**“ இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்”**


என்று சொல்கின்றது திருக்குறள். ஒரு செயல் நடப்பதற்கு கருவி, கருத்தா இரண்டும் தேவை. மன்னர் காலத்தில் வாழ்ந்த திருவள்ளுவர், இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுக்கு முன்பே இது தொடர்பாக பேசியிருக்கின்றார். கருத்துக் கூறியிருக்கின்றார். திருக்குறள் எவ்வளவு காலத்துக்கு முன்பு சொல்லப்பட்ட ஒன்று. இப்பவும் அதை சொல்லிக் கொண்டு, சொல்லும் குரல்களும் கேட்கின்றது. வாழும் காலத்தில், அனுபவ வாயிலாக, நிகழ்கால நிலையை சொன்னால், மக்கள் அல்லது படித்தவர்கள் என்று தம்மை சொல்பவர்கள் எத்தனை பேர் ஏற்பார்கள் என்று சொல்ல முடியாது. இதனை எழுதும் நான் உட்பட எல்லோரும் பிறரை இழித்தும், பழித்தும் எம்மை நாமே உயர்த்தியும் பெருமைப்பட பழக்கப்பட்டு விட்டோம். சரி பிழை, நன்மை, தீமை என்பன இங்கு அவசியமில்லை. எமக்கு பயன் கிட்டுமானால் எதற்கும் துணை போவோம். தவறின் எதிர்ப்போம். இது தான் இன்றைய நிலை. நான் வாழ வேண்டும், மற்றோரை ஆள வேண்டும், என்னை எல்லோரும் அறிய வேண்டும், எனக்கு புகழ் வரவேண்டும் என்பதுதான் எமது கொள்கையே என்று சொல்ல முடியும். இந்த இடத்தில் இன்னுமொன்றையும் கூற விரும்புகின்றேன்.

**பரமபுத்திரன்**

ஆங்கிலேயன் வந்தான், அடிமை கொண்டான் என்று நாங்கள் சொன்னாலும், அவர்களின் வருகைதான் சாதாரண மக்களையும் தமிழ் படிக்க வைத்தது. தமிழை அறிய வைத்தது. எங்களையும் சிந்திக்க தூண்டியது. ஆனால் அப்போதிருந்து சிக்கல் மறுவளமாக தொடங்கி விட்டது. தமிழர்களில் ஒரு பகுதியினர் ஆங்கிலம் படித்தார்கள். தேர்ச்சி பெற்றார்கள். தாங்கள் உயர்ந்தவர்கள் என்று தமக்கு த்தாமே முடிசூடிக் கொண்டார்கள். ஆங்கிலம் படித்தவர்களை அறிவாளிகள் என்று தமிழ் மக்கள் நம்பினார்கள். மீண்டும் தமிழ் மக்களுக்கு தெரியாத மொழித் தமிழ் மக்களிடம் தமிழர் சிக்கிக் கொண்டார்கள். பலர் ஆங்கில அரசின் தொழிலாளர்கள் ஆகினர். அவர்கள் வழங்கிய தொழிலினை மேன்மையாக கருதினர். தன் இனத்துக்கு துணை செய்ய வேண்டியவர்கள், ஆங்கிலம் படிக்கவில்லை என்பதற்காக அந்த இனத்தையே இழிந்ததாக எண்ண ஆரம்பித் தனர். இதன் விளைவு என்ன என்பது யாபேரும் அறிந்த ஒன்று. இனி படித்தவர்களை சற்று பார்ப்போம்.

படித்தவர்கள் எப்படி இருப்பார்கள். படிக்கும் போதே பக்கத்தில் இருப்பவனை முந்த வேண்டும் என்று சிந்திப்பார்கள். மற்றவனுக்கு எதுவுமே சொல்லிக் கொடுக்க கூடாதென்று எண்ணுவார்கள். நான் முதலாவதாக வரவேண்டும் என்று யோசிப்பார்கள். எனக்கே நல்ல வேலை கிடைக்க வேண்டும் என்று முயற்சி செய்வார்கள். கல்வி என்பது சமூக நேசம் கொண்டவனை வளர்க்காமல் தன்னை மட்டும் எண்ணும் இயல்பையே வளர்க்கின்றது. தன்னை மட்டும் எண்ணும் இயல்பும், தமது மக்களையே குறைத்து மதிப்பிடும் போக்கும் முஸ்லிம்கள் அல்லது சிங்கள மக்களிடம் மிகவும் குறைவு. தமிழரின் இந்த இனத்துக்கு எதிரான பண்பை சிங்கள அரசியல் தலைவர்கள் சரியாகவே பயன்படுத்துவர்.

அதனால்தான் முக்கிய பதவி நிலைகளில் தமிழர்களை நியமிப்பர். காரணம் பதவிக்கும் தனக்கு பதவி தந்தவனுக்கும் எப்போதும் நன்றியுள்ளவனாக இருக்கக்கூடிய நல்ல மனிதன் தமிழன். அதற்காக தன் இனத்தையே காட்டிக் கொடுப்பான். இனி மக்களாட்சி என்ன சொல்கிறது என்று பார்ப்போம்.



மக்களாட்சி என்று பெயர் இருந்தால் மட்டும் அது மக்களாட்சி அல்ல. அந்த ஆட்சி மக்களு க்காக நடந்தாலே அது மக்களாட்சி. இன்று எங்கெல்லாம் மக்களாட்சி நடக்கின்றது என்று எண்ணிப் பாருங்கள். அங்கெல்லாம் மக்களாட்சி நடக்கின்றதா என்று ஆய்வு செய்து பாருங்கள். இன்றைய நாட்களில் பொதுவாக தேர்தல் கால பேச்சுக்களும், மக்கள் போடும் வாக்குகளும் மட்டும் தான் மக்களாட்சி என்ற பெயரை தம்வசம் தக்க வைத்திருக்கின்றன. தேர்தல் முடிவு வந்த பின்பு எதுவும் மக்கள் சார்ந்து நடப்பதாக தெரியவில்லை. நடப்பதுமில்லை.





> **ஆங்கிலேயன் வந்தான், அடிமை கொண்டான் என்று நாங்கள் சொன்னாலும், அவர்களின் வருகைதான் சாதாரண மக்களையும் தமிழ் படிக்க வைத்தது. தமிழை அறிய வைத்தது. எங்களையும் சிந்திக்க தூண்டியது.**

மக்களாட்சி என்றால் ஒரு அரசு இருக்க வேண்டும். அந்த அரசினை நிர்வகிக்க ஒரு தலைவர், அந்த தலைவர் மட்டும் அனைத்து செயல்பாடுகளையும் செய்து முடிக்க இயலாது எனவே மக்கள் தெரிவிலிருந்து அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், என்றும், இந்த ஆட்சியை இலகுபடுத்த, நடைமுறைப்படுத்த அரச ஊழியர்கள் செயல்பட வேண்டும் என்றும் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களின் அன்றாட வாழ்நிலை சிக்கல்களையும் அவதானித்து தீர்க்க வேண்டும். அரச ஊழியர்கள் மக்களுக்கு தேவையான அன்றாட வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்ற உதவ வேண்டும். இப்படியான கட்டமைப்பினூடாக பயணிக்க வேண்டிய ஆட்சி இன்று எப்படிப் பயணிக்கின்றது என்று எத்தனை பேர் சிந்திக்கின்றார்கள் என்பது கேள்விக்குரிய ஒன்று. இந்த பொதுவான கேள்வியுடன் ஈழத்து தமிழ் அரசியல் என்னவென்று பார்ப்போம்.

**தொடரும்……..**

# கோவிட்-19 ஒரு கொடிய நோயல்ல!

**மருத்துவ கலாநிதி விக்னேஸ்வரன்**



***உலக சுகாதார அமைப்பின்(WHO) மத்திய கிழக்கு பிராந்திய பொது சுகாதார மருத்துவ நிபுணர் மருத்துவ கலாநிதி விக்னேஸ்வரன் அவர்கள் கொரோனா வைரஸ் தாக்கம் பற்றி வழங்கிய நேர்காணல்***

**கேள்வி:**

**கொரோனா வைரஸ் தற்போது பல நாடுகளில் தாக்கியுள்ளதுடன் அதுவே இன்றைய உலகளாவிய பேசுபொருளாகி இருக்கிறது. உலக சுகாதார அமைப்பு தரும் தற்போதைய தகவல்களை எம்முடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?**

**பதில்:**

உலக சுகாதார நிறுவனம் தினசரி உலகெங்கும் நடைபெறும் கொரோனா வைரஸ் தாக்கம் பற்றிய நிகழ்வுகளை சர்வதேச சுகாதார விதிமுறைகளுக்கு அமைய உத்தியோகபூர்வமாக வெளிக்கொணரும் பொறுப்பினை கொண்டிருக்கிறது. ஆரம்பத்திலே சீனாவில் பரவிய நோயானது, பின்னர் ஏனைய நாடுகளுக்கும் பரவியது. 14ஆம் திகதி மார்ச் 2020 வரை உலக சுகாதார நிறுவனத்தினரின் பதிவுகளின்படி 142,320 நபர் கள் 129 நாடுகளில் இந்நோயின் தக்கத்துக்கு உள்ளாகியுள்ளது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது, இறப்புக்களின் எண்ணிக்கை 5321ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. 2020 மார்ச் மதம் 11ஆம் திகதி இந்த நோயை உலக சுகாதார நிறுவனம் உலகளாவிய மக்களிடையே பரவிய நோயாக அறிவித்திருக்கின்றது.

இது 2009ஆம் ஆண்டு ஏற்பட்ட H1 N1 நோய்த் தாக்கத்திற்குப் பதினொரு ஆண்டுகளின் பின்னர் உலகளாவிய ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்திய நோயாக அறிவிக்கப்பட்ட வைரஸ் நோயாகும். ஆனால் பொதுவாக ஆண்டு தோறும் ஏற்படும் வைரசு காய்ச்சலின் தாக்கத்தைவிட இதன் தாக்கம் குறைவானது. இந்நோய் புதிதாக மனிதர்களிடையே தோன்றிய நோய் எனும் வகையில் இதன் தாக்கம் பயத்தையும் பீதியையும் உருவாக்கி வருகிறது.

இந்த நோய் தாக்கமானது இன்னும் ஒருசில மாதங்களுக்கு ஓரளவு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. ஆனால் விரைவில் கட்டுப்பாட்டுக்குள் வரும் என்பதும் இன்றைய எதிர்வு கூறலாக உள்ளது.

**கேள்வி:**

**இந்த வைரஸ் தாக்கமானது குறைவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்?**

**பதில்:**

உலகளாவிய ரீதியில் இதன் பரம்பலைப் பொறுத்தவரை இதன் முதலாவது அலை உச்சம் பெற்று வருகின்றது. இந்த முதலாவது உலகளாவிய அலையின் போது மார்ச் 13 அன்று அதி கூடியதாக 11,600 புதிய நோயாளர்கள் உலகெங்கும் பதிவு செய்யப்பட்டுள்ளனர் வெளிப்படையான அறிகுறிகளின்றி சாதாரணமான அதிகமாக வெளித்தெரியாத வறட்டு இருமல், தொண்டை நோவு, மெல்லிய காய்ச்சல் என வெளித்தெரிய ஆரம்பிப்பதுதான், பலரில் தொற்றின் பின்னர் அறிகுறிகளின்றி கடந்து செல்வது அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் இவ்வகை நோய்கள் ஓரளவு பரவுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகிறது. இவ்வாறான வைரஸ் நோய்கள் பொதுவாக மக்களிடையே பரவி பெருகி பின்னர் மக்களிடையே ஏற்படும் கூட்டு நோய் எதிர்ப்பு சக்தியின் காரணமாக அதன் தாக்கமும் தொற்று எண்ணிக்கையும் குறையும். இந்த நோயைப் பொறுத்தவரையில் அவ்வாறான ஒரு சூழ்நிலை ஏற்படும். நாங்கள் மிகவும் கவனமாக செயற்பட்டால், இந்நோயின் தாக்கத்தை ஓரிரு மாதங்களில் கட்டுக்குள் கொண்டுவர முடியும்.

**கேள்வி:**

**கவனமாக செயற்படுதல் என்பது தற்சுகாதாரம் பேணல் என கொள்ளலாமா?**



**பதில்:**


தற்சுகாதாரம் பேணலுடன் பொது இடங்களில் கூடுவதை தவிர்க்க வேண்டும். இது முக்கியம். இன்று தொற்றிற்கு உள்ளானவர்கள், உள்ளாகாதவர்கள் என்று இனங்காண முடியாத ஒரு சூழ்நிலையில், பொது இடங்களுக்கு போவதை தவிர்ப்பதன் ஊடாக இதனை கட்டுப்படுத்த முடியும். இன்று பல நாடுகளில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. பொது நிகழ்வுகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அத்தியாவசிய தேவைகள் இருந்தால் அன்றி பொது இடங்களுக்கு போவதை தவிர்த்துக் கொள்ளல், அலுவலகங்கள், பொருட்கள் கொள்முதல் செய்யும் இடங்களில் நபர்கள் இடையேயான இடைவெளிகளை பேணுதலூடாக நாங்கள் இதை தவிர்த்துக் கொள்ளலாம். மேலும் சுகாதார திணைக்களத்தினரின் துரித செயற்பாடும் அவர்களின் ஆலோசனையை ஏற்று நடத்தல், பூரண ஒத்துழைப்பு வழங்குதல், அசண்டையீனம் இல்லாது சமூக பொறுப்புடன் நடந்த கொள்ளல் என்பனவும் அனைவரதும் கடமை.

**கேள்வி:**

**இதுவரை இந்நோயின் தாக்கத்திலிருந்து குணமடைந்தவர்களின் விபரங்கள் எமக்கு எவ்வகையில் எமது மக்களுக்கு பயனுள்ளதாக அமைகின்றன ?**

**பதில்:**

சீனாவில் பெப்ரவரி 11ஆம் திகதிவரை சிகிச்சை பெற்ற 72,314 நோயாளர்களின் குறிப்புகளை ஆய்வுக்குட்படுத்தி பெறப்பட்ட முடிவுகளின்படி, 1.2 வீதமானோர் அறிகுறிகளின் றியும், 81 வீதமானவர்கள் நலிவான நோய் தாக்கத்தி ற்கும், 13 வீதமானோர் தீவிர தாக்கத்திற்கும், 5 வீதமானோர் அதி தீவிர தாக்கத்திற்கும் உள்ளாகியிருந்தமை தெரிய வந்தது. இவர்களில் இறந்தவர்களில் பெரும்பாலானோர் 60 வயதிற்கு மேற்பட்டவர்கள். அவ்வாறனவர்களில் தான் அதி தீவிர தாக்கமும் அதிக இறப்பும் நிகழ்கின்றது. அத்தோடு வேறு நீண்டகால, நோயெதிர்ப்பு குறைபாட்டை ஏற்படுத்தக்கூடிய சலரோகம், புற்றுநோய், சிறுநீரக செயலிழப்பு போன்ற நோய்கள் உடையவர்களும் அதி தீவிர தாக்கத்திற்குள்ளானமை தெரிய வந்துள்ளது. சிறுவர்கள், இளையோர், நடுத்தர வயதுடையோர் தொற்றுக்குள்ளான போதும் அவர்கள் மீதான நோயின் தாக்கம் மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்பட்டுள்ளது. பெண்களை விட ஆண்களில் சற்று அதிகம் பேர் பாதிக்கப்பட்டிருந்தனர்.



IS IT CORONAVIRUS OR NOT?

| | FLU | ALLERGY | COVID-19 |
|---|---|---|---|
| Cough | ✓ | ✓ | |
| Dry cough | | | ✓ |
| Headache | ✓ | | |
| Runny nose | ✓ | ✓ | |
| Itchy/red eyes | | ✓ | |
| Sneezing | | ✓ | |
| Sudden Fever | ✓ | | |
| Fever | | | ✓ |
| Difficulty breathing | | | ✓ |
| Sore throat | ✓ | | |
| Muscle/join pain | ✓ | | |

Source: Mayo Clinic, CDC

இந்நோய்த் தாக்கத்தில் இருந்து விடுபட்டவர்கள் நோய்த் தாக்கத்திற்கு சிகிச்சை பெற்று அவர்கள் திடகாத்திரமாக இருந்தாலும், நோய்த் தாக்கம் குறைந்து குணமடைந்தவர்களில் சிலரில் வைரசுக்கள் தொடர்ந்தும் இருந்தமை இனங்காணப்பட்டது, இது இந்நோய்க்கான உடலின் நோயெதிர்ப்பு சக்தி வைரசுக்களை முற்றாக அழிக்க தேவைப்படும் காலம் நீண்டதாக இருக்கலாம் எனும் அவதானிப்பை மருத்துவ உலகிற்கு வழங்கியிருக்கிறது. எனவே நோய் எதிர்ப்பு சக்தி விருத்தியடைய நீண்ட காலம் எடுக்கும் என்பதனால், நோய் எதிர்ப்பு சக்தி குறைவடையும் போது இது மீண்டும் மீண்டும் தாக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு.

**கேள்வி**

**இந்நோய்க்கான தடுப்பு மருந்துகள், பிரத்தியேக சிகிச்சைக்கான மருந்துகள் என்பன இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என அறிகிறோம், இந்நிலையில் அவ்வாறான முயற்சிகள் எந்தளவில் உள்ளன?**

பதில்

இவ்வகை வைரசுக்களின் தாக்கத்திலிருந்து விடுபட மருந்து தயாரிப்பு என்பதை விட தடுப்பு மருந்து தயாரிப்பு என்பதே பொருத்தமானதாக அமையும். அவ்வகையில் ஒரு சில நிறுவனங்கள், ஆரம்ப கட்ட பரிசோதனைகள் வெற்றியளித்துள்ளதாக அறிவித்துள்ளன. அவற்றை மனிதர்களில் பரிசீலிக்கப்பட்டு விளைவுகள் ஆய்வு செய்யப்பட்டு சந்தைக்கு மருந்துகள் வருவதற்கு சில காலங்கள் எடுக்கும். நோய் எதிர்ப்பு சக்தியை உடல் தானாக உருவாக்கிக் கொள்ளும் காலப் பகுதி கூடுதலாக காணப்படுவது, சாதாரண தடுப்பு மருந்துகள் கண்டுபிடிப்பு, பரிசோதிப்பு மற்றும் உற்பத்தி காலத்தைவிட இந்நோய்க்கான தடுப்பு மருந்து தயாரிப்பில் சற்று கூடுதலானதாக இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தொடர்ச்சி 11ம் பக்கம்**




# ஈழத்தமிழரின் அவலம்தான் பிலொ-ஈலா (Biloela) ஈழத் தமிழ்க் குடும்பம்

**நாம் பலரானாலும் ஒன்றே**
**உலகெங்கும் இருந்திங்கு வருகிறோம்**
**எம் கனவை ஒரு குரலில் பாடுகிறோம்**
**நீயும் நானும் நாமும் அவுஸ்திரேலியர்களே**

*-பிலொ-ஈலா கும்பத்தின் ஒரு ஆதரவாளர்-*

**ந. மாலதி**

**ந**டேசும் பிரியாவும் அகதி தஞ்சம் கோரி கடல் வழியாக வெவ்வேறு காலத்தில், 2012இலும் 2013இலும், அவுஸ்திரேலியாவுக்கு வந்தார்கள். இங்குதான் இருவரும் சந்தித்து திருமணம் செய்து கோபிகா, தர்சிகா என்ற இரு பெண் குழந்தைகளை பெற்றார்கள். இவர்களின் அகதி தஞ்சம் நிராகரிக்கப்பட்டது.

அகதிக்கான ஒரேயொரு நேர்காணல் மட்டுமே தன்னிடம் எடுக்கப்பட்டதாக பிரியா சொல்கிறார். அதுவும் மொழிபெயர்ப்பாளர் ஊடாக தொலைபேசியில் எடுக்கப்பட்டது. அப்போது தொலைபேசி தொடர்பும் இடையிடையே துண்டிக்கப்பட்டதால், பிரியா சொன்ன பலவிபரங்கள் நேர்காணலில் சேர்க்கப்படவில்லை. இருந்தும், பிரியா குடும்பம் விடுதலைப்புலிகளுடன் தொடர்புள்ளவர்கள் என்பதையும், பிரியாவின் தாயார் சிறீலங்கா இராணுவத்தால் பாலியல் வன்புணர்வுக்கு ஆளாக்கப்பட்டார் என்பதையும் பிரியா முன்னர் திருமணம் செய்ய இருந்தவர் சிறீலங்கா இராணுவத்தால் கொலை செய்யப்பட்டார் (கழுத்தில் ரயர் போட்டு கொழுத்தி) என்பதையும் நேர்காணல் எடுத்த அதிகாரி ஏற்றுக் கொண்டார்.

ஆனால் பிரியா சிறீலங்கா விமான நிலையம் ஊடாக சட்டப்படி நாட்டிலிருந்து வெளியேற முடிந்ததால், அவருக்கு அங்கு பிரச்சனையில்லை என்ற அடிப்படையில் அவருடைய அகதி கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

அது போலவே நடேசுக்கும் விடுதலைப்புலிகள் தொடர்பு இருந்தாலும், அவர் போர் நிறுத்த ஒப்பந்த காலத்தில் சிறீலங்காவிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு போய் வந்ததால் அவருக்கும் சிறீலங்காவில் எதுவித ஆபத்தும் இல்லை என்ற அடிப்படையில் அவருடைய அகதி கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டது.

இவர்கள் குடும்பம் பிரிஸ்பேன் மாநிலத்தின் பிலொ-ஈலா என்ற ஒரு கிரமத்தில் அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன் பிரியாவின் தற்காலிக விசா முடிவடைந்த அடுத்த நாள் அதிகாலை, அவுஸ்திரேலிய எல்லை காக்கும் படையினரும் காவல் துறையினரும் சேர்ந்து இக்குடும்பத்தின் வீட்டை முற்றுகையிட்டனர். தங்கள் பொருட்களை எடுத்துக் கொள்ள அவர்களுக்கு பத்து நிமிடங்கள் மட்டுமே கொடுக்கப் பட்டன.

குடும்பம் மெல்போனில் உள்ள தடுப்புக் காவல் இடமொன்றிற்கு விமானத்தில் அழைத்து செல்லப்பட்டனர். சில நாட்களின் பின் சிறீலங்காவுக்கு திரும்ப அனுப்பும் நோக்குடன் ஒரு விமானத்திலும் ஏற்றப்பட்டனர். அகதி செயற்பாட்டாளர்களின் முயற்சியால் குடும்பத்திற்கு மேல்முறையீடு செய்யும் வாய்ப்பு உள்ளது என்பதை கருத்திலெடுத்து நீதிமன்றம் அவர்களை வெளியேற்றுவதை நிறுத்துமாறு உத்தர விட்டது. அவர்கள் விமானத்திலிருந்து இறக்கப்பட்டனர்.

அவுஸ்திரேலிய அரசோ தொடர்ந்தும் குடும்பத்தின் அகதி நிலையை எதிர்த்து நீதிமன்றத்தில் வாதாடி வருகிறது. மேலும் இரண்டு வெளியேற்ற உத்தரவுகளை எதிர்த்து குடும்பம் வாதாடி வருகையில் அவை நீதிமன்றத்தால் நிறுத்தப்பட்டுள்ளன. தற்போது அக்குடும்பம் அவர்களின் இரண்டு சிறு குழந்தைகளுடன் கிறிஸ்துமஸ் தீவில் தனியாக அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். அவுஸ்திரேலியாவில் பிறந்த அவர்களின் கடைசி மகள் தருணிகாவின் அகதி கோரிக்கையின் நீதிமன்ற முடிவுக்காக காத்திருக்கின்றனர்.

இக்குடும்பத்தின் அவலம் ஈழத் தமிழர்களின் அவலத்தையே பிரதிபலிக்கிறது. பிரியா சிறு பிள்ளையாக இருந்த போது அவருடைய அண்ணன் விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்தார். இதனால் பிரியா குடும்பம் தொடர்ச்சியாக சுற்றி வளைப்புகளின் போது சிறீலங்கா இராணுவத்தால் துன்புறுத்தபபட்டது. இரவு நேரங்களில் குடும்பத்தின் வீடு குறிவைக்கப்பட்டு தாயோ தந்தையையோ அழைத்து செல்லப் பட்டனர்.




இவ்வாறு அழைத்து செல்லப்பட்ட பிரியாவின் தாயார் காயங்களுடன் வீட்டுக்கு அனுப்பப் பட்டுள்ளார். தந்தையோ ஒரு கண்பார்வையை இழந்துள்ளார். தாயார் பாலியல் வன்புணர்வுக்கும் உள்ளாக்கப்பட்டு நினைக்கவியலாத துன்புறுத்தல்கள் அவருக்கு செய்யப்பட்டுள்ளன. பிரியாவுக்கு வயது வந்த போது அவருக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டவர் இராணுவத்தால் தீயிட்டு எரிக்கப் பட்டார். பிற்காலத்தில் அவர்கள் வீடு விமான குண்டுத் தாக்குதலில் அகப்பட்ட போது பிரியாவுக்கும் பாரிய காயங்கள் ஏற்பட்டன.

பிரியா-நடேசின் அனுபவங்கள் இன்று உயிருடன் இருக்கும் 20-90 வயதுக்கு உட்பட்ட ஈழத்தமிழர்கள் பலருக்கும் ஏற்பட்டிருக்கிறது. 20-90 வயதுக்கு உட்பட்ட ஈழத்தமிழர் எல்லோருமே சிறீலங்கா அரசின் துன்புறுத்தல்களுக்கு ஏதோவொரு வழியில் முகம் கொடுத்திருக்கின்றனர். சிறீலங்கா இராணுவத்தின் சோதனைச் சாவடிகளில் நடந்த துன்பு றத்தல்களிலிருந்து விபரிக்க முடியாத கொடிய சித்திரவதைகள், காணாமல் ஆக்கப்படல் மற்றும் நீதிக்கு புறம்பான கொலைகள் என்று இவை விரிகின்றன. 50களிலிருந்து தமிழருக்கு எதிராக தொடர்ந்த தீவு தழுவிய பல படுகொலைகளே ஆயுதப் போராட்டத்திற்கும் வித்திட்டன.



அரச வன்முறைகளுக்கு ஆளாக்கப்படும் உலகின் பல மக்களைப் போலவே ஈழத்தமிழர்களும் உலகின் பல நாடுகளில் தஞ்சம் கோருபவர்களாக அறியப்பட்டுள்ளனர். அவ்வாறு தஞ்சம் கோருபவர்களும் இந்நாடுகளில் மேலும் பல விதமான வன்முறைகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர். இந்தியா-ஐரோப்பா-கனடா-அவுஸ்திரேலியா என்று எங்கும் கொடுமைக்கு ஆளாக்கப்படும் ஈழத்தமிழ் அகதிகள் பற்றிய செய்திகள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

உலகெங்கும் தடுப்பில் வைக்கப்பட்டுள்ள தமிழ் அகதிகள் உண்ணாவிரத போராட்டம் செய்து வருகிறார்கள். கொடுமையும் ஏக்கமும் தாங்க முடியாமல் தற்கொலை செய்துள்ளார்கள். சில நாடுகளில் பாலியல் வன்புணர்விற்கும் உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

சிறீலங்காவிற்கு திருப்பி அனுப்பப்பட்ட பலரில் சிலர் மீண்டும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இம்மாதிரியான அனுபவங்களின் பின்னணி உள்ள 20-90 வயதுக்குட்பட்ட ஈழத் தமிழருக்கு பிரியா-நடேஸ் பிலொ-ஈலா தமிழ் குடும்பம் அவல நிலையில் உள்ள பல லட்சம் தமிழர்களில் ஒன்று போலவே தெரியும்.

இந்த குடும்பத்தின் நிலைமையில் ஒரு பாரிய வித்தியாசம் என்னவென்றால், இக்குடும்பத்தின் போராட்டத்தை பிலொ-ஈலா கிராமத்து மக்களும் தமதாக்கி விட்டார்கள் என்பதுதான். இக்குடும்பம் அவுஸ்திரேலிய எல்லைப் படையினரால் அன்று அதிகாலை வெளியேற்றப்பட முன்னரே இவர்களை பிரொ-ஈலா கிராமம் நன்கறிந்துள்ளது. இக்கிராமத்தவர்கள் இவர்களுக்காக உருவாக்கிய போராட்ட இணையத்தளம் இது. பிலொ-ஈலா கிராமத்தினர் சிலரின் உழைப்பால் இக்குடும்பத்தின் கதை இன்று அவுஸ்திரேலியா மையநிரோட்ட ஊடகங்களில் அதிகம் பேசப்படுகிறது. இதனால் அவுஸ்திரேலிய மக்களிடம் இவர்களின் கதை பிரபலமாகியுள்ளது. அவுஸ்திரேலியா எதிர் கட்சியினரும், ஐநா மனித வுரிமை கவுன்சிலும் கூட இக் குடும்பத்திற்காக குரல் கொடுத்துள்ளனர். யூரியூப்பில் *'Biloela Tamil family'* என்று தேடினால் பல ஊடகச் செய்திகளை பார்க்கலாம்.

கடலால் கப்பலில் வரும் அகதிகளை அவுஸ்திரேலியா துரித கதியில் கையாளும் முறையை எதிர்க்கும் போராட்டங்களுக்கு இக் குடும்பத்தின் கதை ஒரு மையப் பொருளாகி விட்டது. இந்த மனித நேயமற்ற அவுஸ்திரேயாவின் கொள்கையை, 'தவறானது', "அகதிகளை

**தொடர்ச்சி 11ம் பக்கம்**

அணு குண்டுகள் வீசும் விமானங்கள் மூலம்

## அமெரிக்கா மேற்கொண்ட போர் ஒத்திகை



ரஷ்யாவுடனான முறுகல் நிலை அதிகரித்துள்ள நிலையில், நேட்டோ படையினர் திட்டமிட்டபடி தமது போர் ஒத்திகையை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக் கிழமை(13) காலை பிரித்தானியாவில் உள்ள வான்படைத் தளத்தில் அமெரிக்காவின் மிக நவீன உருமறைப்பு பி-2 என்ற போர் விமானம் தரையிறங்கியுள்ளது.

போர்த்துக்கல்லில் உள்ள அமெரிக்காவின் தளத்தில் இருந்து சென்று குண்டு வீச்சு ஒத்தி கைகளை மேற்கொண்ட விமானம், பிரித்தானியா வின் குளொச்செ ஸ்ரர் பகுதியில் உள்ள வான் படைத் தளத்தில் தரையிறங்கியுள்ளது. அணு குண்டுகளையும், சாதாரண குண்டுகளையும் வீசும் தகமை கொண்ட இந்த விமானங்கள் எதிரிகளின் ரடார்களில் இருந்து தப்பும் தொழில் நுட்பம் கொண்டவை.

## அமெரிக்கா வான் தாக்குதல் – ஈராக் கண்டனம்



கடந்த வெள்ளிக்கிழமை(13) அமெரிக்காவின் வான்படை விமானங்கள் மேற்கொண்ட தாக்கு தலில் ஆறு பேர் கொல்லப்பட்டதாகவும், இந்த தாக்குதலை வன்மையாக கண்டிப்பதாகவும் ஈராக் தெரிவித்துள்ளது.

தமது நாட்டின் இறைமையை பாதிக்கும் செயல் இது எனவும் தமது பாதுகாப்பு பிரச்சனை களை தமது அரசு தீர்த்துக் கொள்ளும். அதனை அமெரிக்கா போராக மாற்ற வேண்டியதில்லை எனவும் ஈராக் அதிபர் பார்கம் சாலியா தெரிவித்துள்ளார்.

அதே சமயம், அமெரிக்க மற்றும் பிரித் தானிய தூதுவர்களிடம் இது தொடர்பில் விபரங் களை கேட்பதற்றாக தாம் அழைத்து ள்ளதாக ஈராக் வெளி விவகார அமைச்சர் தெரிவி த்துள்ளார்.

ஆனால் ஈரானின் ஆதரவுடன் இயங்கும் ஆயுதக் குழுவினர் கடந்த வாரம் மேற்கொண்ட உந்துகணைத் தாக்குதலில் இரண்டு அமெரிக் கப் படையினரும், ஒரு பிரித்தானிய இராணுவ த்தினரும் கொல்லப்பட்டதற்கு பதிலடியாகவே தாம் இந்த தாக்குதலை அவர்களின் தளங்கள் மீது மேற்கொண்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. இந்த தாக்குதலில் பிரித்தானியாவும் இணைந்து கொண்டதாக அது மேலும் தெரிவித்துள்ளது.

ஆனால் அமெரிக்காவின் தாக்கு தலில் கார்பலா விமான நிலையமே சேதமடைந்த தாகவும், அதில் சமயல் பணியாளரும், 3 ஈராக் படையினரும் கொல்லப்பட்டதாக ஈராக் தெரிவித்துள்ளது.

## இடை நிறுத்தப்பட்ட பங்குச் சந்தைகள் மிகப் பெரும் பொருளாதார சரிவு




கொரோனா வைரஸ் தாக்கத்தின் எதிரொலியால் அமெரிக்காவின் பங்குச் சந்தை திங்கட்கிழமையும்(9), வியாழக்கிழமையும்(12) 15 நிமிடங்கள் இடைநிறுத்தப்பட்டதுடன், சிறீ லங்காவின் கொழும்பு பங்குச் சந்தை கடந்த செவ்வாய்க்கிழமை(10), வியாழக்கிழமை(12) மற் றும் வெள்ளிக்கிழமை(13) ஆகிய 3 நாட்களும் 30 நிமிடங்கள் இடைநிறுத்தப்பட்டது.

இந்திய பங்குச் சந்தை உட்பட ஆசியா வின் பல பங்குச் சந்தைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன. கொழும்பு பங்குகள் அனைத்தும் 5 விகித வீழ்ச்சியை கண்டிருந்தன. ஆனால் மேலதிக வீழ்ச்சியை தடுக்கும் நோக் கத்துடன் பங்குச் சந்தை வர்த்தகம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

அமெரிக்காவின் பங்குச்சந்தை உட்பட மேற்குலகத்தின் பங்குச் சந்தைகள் அனைத்தும் கடுமையான வீழ்ச்சியை கண்டதால் அவை கடந்த வாரத்தின் இரு நாட்கள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டன. இந்த வீழ்ச்சியானது கடந்த 2008ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியை ஒத்ததாக இருந்ததால் கறுப்பு திங்கள் என இந்த நாளை ஊடகங்கள் வர்ணித்திருந்தன.

ஆனால் கடந்த வியாழக்கிழமை(12) மீண் டும் பங்குச் சந்தை கள் கடுமையான வீழ்ச்சியை கண்டன. இது 1987ஆம் ஆண்டு ஏற்பட்ட மிகப் பெரும் வீழ்ச்சியை விட மோசமாக இருந்ததாக தெரி விக்கப்படுகின்றது.

இதனிடையே, உலகில் மசகு எண்ணை விலை 31 விகிதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 1991ஆம் ஆண்டு இடம் பெற்ற வளைகுடா போ ரின் பின்னர் ஏற்பட்ட மிக ப்பெரும் வீழ்ச்சியா கும்.

உலகம் முழுவது முள்ள சுற்றுலா மற்றும் பயணத்துறை நிறுவனங்க ள் 820 பில்லியன் டொல ர்களை இழக்கும் சாத்திய ங்கள் உள்ளதாக கடந்த செவ்வாய் கிழமை (10) உலக போக்குவரத்து வர்த்தக சபை தெரிவித்தி ருந்தது.

எனினும், பொருளாதார வீழ்ச்சியை தடுக்கும் நோக்கத்துடன் 1.5 றில்லியன் டொலர் களை வழங்குவதற்கு அமெரிக்காவின் மத்திய வங்கி முன்வந்துள்ளது.

2001ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் இடம் பெற்ற தாக்குதலைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியை விட கொரோனா வைரஸ் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக பிரித்தானியாவின் பிரிட்டிஸ் விமான நிறுவனத் தின் தலைவர் அலக்ஸ் குருஸ் தெரி வித்துள்ளார்.

பெருமளவான பணியாளர்கள் வேலைக ளையும் இழக்கலாம் என அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

அதே சமயம், விமான நிறுவனங்களின் இழப்பு கடந்த வாரம் தெரிவித்த தொகையான 113 பில்லியன் டொலர்களை விட அதிகமாக இருக்கும் எனவும், அமெரிக்க அதிபரின் ஐரோப் பாவுக்கான பயணத்தடை மேலும் பாதிப்புக் களை ஏற்படுத்தியுள்ளதாகவும் அனைத்துல வான் போக்குவரத்து சபையின் தலைவர் அலக்ஸ் சாண்டா டி யுனைக் தெரிவித்துள்ளார்.

## சமூகவலைத் தளங்களே உலகின் நிலையை மோசமாக்கியுள்ளன



கொரோனா வைரஸ் நோய் தொடர்பான தற்போதைய நிலை யை சமூகவலைத் தளங்களே அதிகம் மோசமாக்கியுள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கடந்த புதன்கிழமை(11) தெரிவித்துள்ளார்.

இதனிடையே, முகநூல், கூகுள் மற்றும் இன்ஸ்ரோகிராம் ஆகிய சமூக வலைத்தளங்கள் போலியான தகவல்க ளை பரப்புவதை தவிர் க்க முயற்சிப்பதாக தெரிவித்துள்ளதாக பிரித்தானியாவின் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

போலியான முகநூல் கணக்குகளில் இருந்து பொய்யான தகவல்கள் பரிமாறப்படு வதாக பிரித்தானிய அரசு சமூகவலைத் தளங்கள் மீது குற்றம் சுமத்தியுள்ளது.

சமூக வலைத்தளங்களே உலகின் பொரு ளாதாரத்தை முற்று முழுதாக சீரழித்துள்ளதாக மேற்குலக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

போலியான தகவல்களை பரப்பி மக் களை அச்சத்தில் ஆழ்த்தி வருவதுடன் பல நாடுகளின் உறுதித் தன்மையையும் சீர்குலைத் துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த நடவ டிக்கைகளில் முகநூல் மற்றும் ருவிட்டர் ஆகிய தளங்கள் முன்னிலையில் இருக்கின்றன.

## கோவிட்-19 .... தொடர்ச்சி..

**கேள்வி:**

**ஒரு மனிதரிடமிருந்து இன்னொருவருக்கு கொரோனா வைரஸ் எப்படி பரவுகின்றது?**

**பதில்:**

மனிதர்களின் சுவாசப் பாதைகளிலிருந்து வெளிப்படும் துணிக்கைகள் ஊடாகவே இந்த வைரஸ் பரவும். ஆனால் பெருமளவானவர்களிடம் இந்த வைரஸ் காணப்படுகின்ற போது. இருமல், தும்மல் மட்டுமல்ல சாதாரணமாக பேசும் போது கூட தெறிக்கும் துளிகள் நாங்கள் இருக்கும் சூழலில் உள்ள மேற்பரப்புகளில் படியும் வாய்ப்பு இருக்கின்றது. இந்த மேற்பரப்புகளை நாங்கள் தொடுகின்ற போது அந்த வைரஸ்கள் எங்கள் கைகளில் வரும். அத்துடன் இம் மேற்பரப்புகளில் சில நாட்கள் வரை தங்கியிருக்க கூடிய வைரசுக்கள் எம்முடைய கைகளிலும் ஒட்டிக்கொள்ளலாம், அம்மேற்பரப்புக்களையோ, உடைகள் மற்றும் பாவனை பொருட்களையோ நாம் தொடும்போது கைகளுக்கும், பின்பு முகம் மூக்கு, வாய் போன்ற உறுப்புக்கள் ஊடாக எமது சுவாசப் பாதையை சென்றடைந்து பெருகி நோயை ஏற்படுத்த வாய்ப்பாக அமைகிறது. அதனாலேயே பொது இடங்களிலுள்ள பிற பொருட்களை கையாண்டதன் பின் கைகளை நாங்கள் அடிக்கடி கழுவிக் கொள்ளுவோமாக இருந்தால், எமக்கு இந்த நோய் தொற்றுவதை குறைக்க முடியும்

**கேள்வி:**

**முகக் கவசங்கள் பயன்படுத்துவதன் மூலம் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து நம்மை தற்காத்து கொள்ள முடியுமா ?**

**பதில்:**

எல்லோரும் முகக்கவசம் அணிய வேண்டியதில்லை, சாதாரண முகக்கவசங்கள் முழுமையாக சுவாச துணிக்கைகளை தடுக்காது, மேலும் துணிக்கைகள் எமது மூக்கையும் வாயையும் நோக்கி மட்டும் தெறிக்காது, கண் களூடாகவும் தொற்றும் வாய்ப்புள்ளது. முன்னர் குறிப்பிட்டது போல துணிக்கைகள் கீழ் நோக்கி சென்று பொருட்களிலும், மேற்பரப்புகளிலுமே படியும். அங்கிருந்து தொடுகைமூலமே அதிகம் பரவும். நாம் முகக்கவசத்தை அணிந்த பின் அதிகம் முகத்தை தொற்றுக்குள்ளான கைகளால் தொடுவோம். இது தொற்றுக்கான வாய்ப்பை அதிகரிக்கும். ஆனால் நோயின் தாக்க அறிகுறிகள் கொண்டவர்கள் கட்டாயமாக முகக்கவசம் பயன்படுத்த வேண்டும். எந்தவொரு சுவாச தொற்றுக்கு உள்ளானவர்களும் நோய் இனங்காணப்பட்டு சிகிச்சை முடிவுறும் வரை முகக்கவசம் பயன்படுத்த வேண்டும். மேலும் அவர்களை பராமரிப்பவர்கள் நிச்சயமாக தடுப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டும். மருத்துவர்கள், ஆய்வுகூட பணியாளர்கள், அவர்களின் மாதிரிகளை பரிசோதிப்பவர்கள். அவர்களை பாதுகாத்துக் கொள்ள பாதுகாப்பு உடைகளையும் அணிய வேண்டும்.

தும்மல், இருமல், மற்றும் உரையாடல்களின் போது சுமார் ஒரு மீட்டர் தூரம் வரை சுவாசத் துளிகள் பரவும் வாய்ப்புகள் உள்ளன எனவே நாம் நெரிசலை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

**கேள்வி**

**தும்மல், இருமல், மற்றும் உரையாடல்களின் போது துணிக்கைகள் மேற்பரப்புகளில் படிந்து இருந்தால் அங்கு வைரசுக்கள் எவ்வளவு காலம் உயிர்ப்புடன் இருக்கும் ?**

**பதில்:**

இது தொடர்பாக முழுமையான ஆய்வுகள் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. குளிர் பிரதேசங்களில் சில நாட்கள் இருக்கும் எனக் கூறப்படுகின்றது. எல்லா வெட்ப தட்ப நிலைமைகளில் இந்த கிருமிகள் எவ்வளவு நாட்கள் இருக்கும் என்பது இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. ஆனால் உலோகப் பொருட்களில் இது கூடிய காலம் இருக்கும் என்றும், அங்கிருந்து அவை இலகுவாக பரவும் என்றும் கூறப்படுகின்றது. உடைகளைப் பொறுத்த வரையில் பருத்தி உடைகளில் அவை ஈரப்பதனை உறுஞ்சும் தன்மை கொண்டதனால் அவற்றில் அதிக காலம் வைரசுக்கள் உயிப்புடன் இருக்கும் வாய்ப்பு குறைவு ஆனால் செயற்கையான துணிவகைகள், தோல்பொருட்கள் பொலியஸ்டர் போன்ற உடைகளில் சில நாட்கள் வைரசுக்கள் உயிப்புடன் இருக்கும் வாய்ப்பு அதிகம்.

**கேள்வி:**

**அதிகமான நாடுகளில் அதிக மக்கள் கொரோனா வைரசால் தாக்கப்படலாம் என்று எதிர்பார்க்கின்றார்கள். அப்படி தாக்கினால் எவ்வளவு மக்கள் இறப்பார்கள் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.**

**பதில்:**

சீனாவைப் பொறுத்தளவில் கிட்டத்தட்ட 1.7 பில்லியன் மக்கள் வாழுகின்ற ஒரு பிரதேசம். 81,000 பேருக்கு மட்டும் தான் தாக்கம் ஏற்பட்டிருக்கின்றது. இது 0.05 வீதம் தான் இது மிகக் குறைந்தளவு. ஆகவே இது பெரியளவு தாக்கத்தை ஏற்படுத்த வாய்ப்பு இல்லை. அது மிகப் பெரிய ஒரு எடுத்துக்காட்டு.

அத்துடன் அபாரத் தொற்று ஏற்பட்டு இறப்பது என்பது இன்றைக்கு உலகளவிலே தொற்று ஏற்பட்டவர்களில் நூற்றிற்கு மூன்று பேர் என்ற அளவிலேயே உள்ளது. இந்த இறப்பு வீதமானது மிகமிகக் குறைவானதாகவே காணப்படுகின்றது. இருந்தாலும் கவனமாக இருப்பது நல்லது. இது ஒரு புதிய நோய். அதனுடைய முழுமையான தாக்க விபரங்கள் எங்களுக்குத் தெரியாது. நாங்கள் கவனமாக இருக்க வேண்டுமே அன்றி பயப்படவோ பீதியடையவோ தேவையில்லை. எங்களை நாங்கள் தற்காத்துக் கொள்ள வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இன்று இருக்கும் ஊடகங்கள் ஊடாக மக்கள் தெளிவாக உள்ளனர். அந்த வகையில் மிகுந்த கவனமாக இருக்க வேண்டும். முக்கியமாக சிறுவர்கள், முதியோர்கள், நோயின் தாக்கத்திற்குள்ளானவர்களை கவனமாக பராமரிப்பது மிகமிக முக்கியம்.

• • •

## ஈழத்தமிழரின்.... தொடர்ச்சி..

இருவகையாக பிரித்து இவர்களை மட்டமாக கையாளுகிறது'', "துரிதமான முடிவை எட்டும் நோக்குடன் நியாயத்தை விலையாக கொடுக்கிறது'' என்றெல்லாம் விபரித்துள்ளனர்.

மனித நேயமுள்ள அவுஸ்திரேலிய மக்கள், சிறந்த உழைப்பாளிகளான இக்குடும்பத்தின் மனதை உருக்கும் நிலைமைக்காக போராட வேண்டும் என்று எண்ணுகிறார்கள். போராடுகிறார்கள். ஆனால், முதலில் கூறியது போல ஈழத்தமிழருக்கோ, பிலொ-ஈலா தமிழ் குடும்பத்தின் நிலைமை இது போன்ற பல லட்சம் ஈழத் தமிழர்களின் கதைகளில் ஒன்று தானே என்று தான் தோன்றும். ஈழத்தமிழர்களின் உணர்வுகளும் களைத்து விட்டது. மனித நேயமும் வற்றி விட்டது. இக்குடும்பத்தின் கதை இவர்களை போராட்டத்திற்கு தூண்டவில்லை.

போராட்டத்திற்கு மக்களை ஒன்று சேர்ப்பதற்கு குறியீடுகள் தேவையானவை, அவசியமானவை. இக்குடும்பம் ஒட்டுமொத்த அவுஸ்திரேலியாவின் கவனத்தை ஈர்த்திருப்பதால், ஈழத் தமிழர்களும் தங்கள் நிலைமையின் பிரதிநிதியாக, பிலொ-ஈலா குடும்பத்தை குறியீடாக ஏற்க வேண்டும். அவர்களுக்கான போராட்டங்களில் இணைய வேண்டும்.

## தென்னிலங்கை.... தொடர்ச்சி..

கொண்ட மருத்துவ வமனையில் அவர்களை தனிமைப்படுத்தி வைப்பது தான் பொருத்தமானது என நாங்கள் கருதுகின்றோம்.

**கேள்வி:**

**நேற்று இரவு ஏழு மணியளவில் வவுனியாவில் பத்து பேருந்தில் கொரோனா வைரஸ் பாதிப்பிற்குள்ளானவர்களை கொண்டு வந்து பம்பைமடு பெண்கள் இராணுவ தடுப்பு முகாமில் வைத்திருக்கின்றார்கள். இந்த நிலையில் வவுனியா மக்கள் அச்சம் கொண்டிருக்கின்றார்கள்.**

**பதில்:**

அதைப் பற்றி நாங்கள் அச்சம் கொண்டிருக்கின்றோம். அது பற்றி நாங்கள் சுகாதார அமைச்சுடனும் அரசுடனும் பேசவிருக்கின்றோம். அதன் தன்மை அதன் பாதிப்பு தமிழ்த் தேசங்களில் ஏற்படக் கூடாது. பரவிடக் கூடாது என்பதில் நாங்கள் அக்கறை கொண்டிருக்கின்றோம். மருத்துவ ரீதியான காரியங்களில் நாங்கள் எங்களுக்கு அப்பாற்பட்ட விடயங்களை பேசிக் கொண்டிருப்பதைவிட சாத்தியமான பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை நாங்கள் அரசு சுகாதார அமைச்சுடனும், உலக சுகாதார நிறுவன ங்களுடனும் பேசி நாங்கள் ஒரு முடிவிற்கு வருவது தான் நல்லது என்பது என்னுடைய கருத்து.


**கேள்வி**

**புலம்பெயர் தேசங்களில் இருக்கும் தமிழர்கள் இந்த முறை நாடாளுமன்ற தேர்தலை எவ்வாறு கையாளுவார்கள்? அவர்களின் ஆதரவு உங்களுக்கு எவ்வாறு தேவைப் படுகின்றது என நினைக்கின்றீர்கள்?**

**பதில்:**

புலம்பெயர்ந்தவர்கள் தங்கள் ஆதரவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குத் தெரிவிப்பார்கள். அதைவிட எதிர்வரும் காலத்தில் இலங்கை அரசாங்கம் சர்வதேச நாடுகளின் தீர்மானங்கள், மனித உரிமைகள் தீர்மானங்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்ற போது புலம்பெயர் தேசத்தில் வாழுகின்ற எங்கள் மக்கள் அந்தந்த நாடுகளின் அரசாங்கத்திலும் தங்கள் செல்வாக்கை பயன்படுத்த வேண்டும். தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஒரு சிறந்த ஜனநாயக கட்சியாக இந்த நாட்டில் செயற்படுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரிக்க வேண்டும் இந்த இனத்தின் விடுதலைக்காக அந்தந்த நாடுகளில் அவர்களும் ஒன்றுபட்டு மனித உரிமைகள் பேரவை தீர்மானங்களை மையமாகக் கொண்டு தங்களின் சரியான தீர்மானத்தை அவர்கள் எடுப்பார்கள். எங்களுடன் இணைந்து செயற்படுவார்கள். அதற்கான ஒரு திட்டத்தை நாங்களும் கொண்டிருக்க வேண்டும். அவர்கள் எங்களுடன் இணைந்து வேலை செய்வார்கள் என்று நம்புகின்றோம்.

• • •



# உலகை அச்சுறுத்தும் கோவிட்-19- சில தகவல்கள்

### தரையில் 72 மணி நேரம் உயிர்வாழும் வைரஸ்

கொரோனா வைரஸ் தரையில் 48 மணி நேரம் தொடக்கம் 72 மணிநேரங்கள் உயிர் வாழும் என தெரிவிக்கப்படுகின்றது.

கடினமான பொருட்களின் மேற்பகுதியில் அல்லது தரையில் அதிக நேரம் உயிர் வாழும் வைரஸ் மென் மையான பகுதிகளில் குறுகிய நேரமே வாழக் கூடியது.



மென்மையான தரைப் பகுதியில் 24 மணி நேரமும், கடினமான பகுதியில் 48 மணி நேரமும் உயிர் வாழும் வைரஸ், சில சமயங்களில் கடினமான பகுதியில் 72 மணி நேரமும் வாழக்கூடியது.

ஆனால் இந்த வைரஸ் வீரியம் குறைந்தது, எனவே இலகுவாக சாதாரண கிருமி கொல்லி களைக் கொண்ட, வீட்டில் பாவிக்கும் கிருமி கொல்லி இரசாயன துப்பரவு செய்யும் திரவங்களால் அதனை அழிக்க முடியும் என தெரிவிக்கப் படுகின்றது.

### முகப் பாதுகாப்பு அங்கிகள் அதிக ஆபத்தானவை

கொரோனா வைரஸ் இல் இருந்து பாது காப்பு தேடும் பொருட்டு மக்கள் பாவிக்கும் முகக் கவச அங்கிகள் அதிக பாதிப்புக்களை ஏற்படுத்தும் என வைத்தியர் கரிஸ் பி.பி.சி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பொது மக்கள் முக அங்கிகளை அணிந்து செல்வது பாதுகாப்பானது அல்ல, ஒரு அங்கியையே அவர்கள் மீண்டும் மீண்டும் பயன்படுத்துகின்றனர். அதனை அவர்கள் எப்போதும் அணிவதில்லை, வீட்டில் இருக்கும் சமயங்களில், அல்லது வேறு பகுதிகளில் அதனை அகற்றி துப்பரவு அற்ற இடங் களில் வைக்கின்றனர்.

கழுவாத கைகளினால் அதனை பயன்படுத்துகி ன்றனர், செல்லுமிடங்களில் தேனீர் அருந்தும் போதும், அல்லது வேறு பணிகளின் போதும் அதனை அகற்றி மீண்டும் அணிகின்றனர்.

அதாவது வைரசை உங்கள் முகக் கவசங்களில் தொற்ற வைத்த பின்னர் அதனை நீங்கள் சுவாசிக்கின்றீர்கள். எனவே முகக்கவசம், பாதுகாப்பை விட அதிக பாதிப்புக்களையே ஏற்படுத்தும்.

ஆனால் சுகாதாரப் பணியாளர்கள் உங்களை அணியும்படி கூறினால் நீங்கள் அவர்களின் நடை முறையை பின்பற்றி அணியலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


### கர்ப்பிணிகளை இலகுவாக தாக்கும் வைரஸ் குழந்தைகளை பாதிக்காது

கோவிட்-19 வைரஸ் கர்ப்பிணிப் பெண்களை இலகுவாக தாக்கும் போதும், கருப்பையில் இருக்கும் குழந்தைகளை தாக்குவதில்லை என தெரிவிக்கப்படுகின்றது. அதாவது தாயின் குருதியில் இருந்து குழந்தைக்கு கிருமிகள் கடத்தப் படுவதில்லை.

எனினும் கர்ப்பிணித் தாய்மார்கள் மக்கள் கூடும்இடங்களைதவிர்க்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். அதேசமயம், குழந்தைகளுக்கு பாலூட்டும் தாய்மார்கள் அதிக கவனம் எடுக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

### நுரையீரலை கடுமையாக சேதமாக்கும் கொரோனா

மனிதர்களின் துரையீரலை வைரஸ் எவ்வாறு தாக்கி சேதப்படுத்துகின்றது என்பது தொடர்பான சி.ரி மற்றும் எக்ஸ்றே புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.




கோவிட்-19 வைரஸ் தாக்கியவர்களின் நுரையீரல்களின் புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதில் சேதமடைந்த துரையீரலில் நீர் அதிகளவு சேர்ந்துள்ளதுடன் துரையீரலும் கடுமையாக சேதமடைந்துள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

### ஒரு தடவைக்கு மேல் வருமா கொரோனா?

ஒரு தடவைக்கு மேல் வைரஸ் நோய்கள் மனிதர்களை தாக்குவதில்லை என்ற போதும் சீனாவில் சிலருக்கு இரண்டு தடவைகள் தொற்றுதல் ஏற்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இது மிகவும் அசாதாரணமானது எனவும், ஒரு தடவை வைரஸ் தொற்றுதல் ஏற்ப டும் போது உடல் அதற்குரிய எதிர்ப்பு சக்தியை உருவாக்கிக் கொள்வதால் மீண்டும் நோய் ஏற்படு வதற்கான சந்தர்ப்பங்கள் மிக மிக குறைவு எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

### 39 இலட்சம் மக்கள் கொரோனா நோயால் பாதிக்கப்பட வேண்டும் - பிரித்தானியா

கொரோனாவை எதிர் காலத்தில் நாம் கட்டு ப்படுத்த வேண்டும் என்றால் ஏறத்தாள 65 மில்லியன் மக்கள் தொகையை கொண்ட பிரித்தானியாவில் 60 விகித மக்களுக்கு இந்த தொற்று நோய் ஏற்பட வேண்டும் என பிரித்தானியாவின் பிரதம விஞ்ஞான ஆலோசகர் பற்றிக் வலன்ஸ் பிரபு தெரி வித்துள்ளார்.

பிரித்தானியாவை தளமாகக் கொண்ட ஸ்கை செய்தி நிறுவனத்திற்கு கடந்த வெள்ளிக் கிழமை (13) கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:



எமது சமூகம் நோய் எதிர்ப்பு சக்தியை பெற வேண்டும் என்றால் எமது மக்கள் தொகையில் ஏறத்தாள 60 விகிதமானவர்கள் இந்த நோயினால் பாதிக்கப்பட்டு மீள வேண்டும்.

இது ஒரு கடுமையான நோயாக இருந்த போதும், பெருமளவான மக்கள் சிறிய அறிகுறிகளையே காண்பித்துள்ளனர். 65 மில்லியன் மக்களில் பெருமளவான மக்கள் இந்த நோய்க்கு உட்பட் டால் எதிர்காலத்தில் அதனை தவிர்க்க முடியும்.

இந்த வைரசும் ஏனையவற்றைப் போல ஒவ்வொரு வருடமும் மீண்டும் மீண்டும் வரலாம். எனவே எமது சமூகம் அதற்கான எதிர்ப்பு சக்தியை பெற வேண்டும். இறப்பு விகிதம் 1 விகிதமாகவே உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### கொரோனா வைரஸ் - 167 பில்லியன் டொலர்களை இழந்தது அப்பிள் நிறுவனம்



கோவிட்-19 என்ற கொரோனா வைரஸ் பொருளாதாரத்தில் அதிக சேதங்களை ஏற்படுத்தி வருகின்றது. சீனாவில் வர்த்தகம் கடந்த மாதம் முடங்கியதால் அப்பிள் கைபேசி விற்பனை சீனாவில் 60 விகிதம் வீழ்ச்சி கண்டுள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது கைபேசி விற்பனை 4,95,600 எண்ணிக்கையால் குறைவடைந்துள்ளதுடன், அன்ரோயிட் கைபேசி விற்பனையும் 56 விகிதத்தால் குறைந்துள்ளது. அதாவது 6.4 மில்லியன் விற்பனைக் குறைவு.

சீனாவில் அப்பிள் நிறுவனத்தின் இழப்பு 5 பில்லியன் டொலர்கள் என மதிப்படப்பட்ட போதும், கடந்த திங்கட்கிழமை(9) அமெரிக்கா பங்குச் சந்தையில் ஏற்பட்ட சரிவினால் இந்த நிறுவனம் 167 பில்லியன் டொலர்களை இழந்துள்ளது.